ஐந்தாம் வகுப்பு

இயல்-4 எதனாலே? எதனாலே?

பயிற்சித்தாள்- 5

பெயர்: ____________________ தேதி: ________________

**அ. பின்வரும் பத்தியை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக:**




இன்று உலகளாவிய ரீதியில் பிளாஸ்டிக், பாலித்தீன் பயன்பாட்டின் தேவை அதிகரித்துள்ளது.

பிளாஸ்டிக் என்பதை தமிழில் நெகிழி என்பர். இவை பன்முகப்பாவனை உடையவை, மலிவானவை, நீண்ட காலம் பாவிக்கக்கூடியவை. இவை போன்ற காரணங்களால் அதிகமானோர் பயன்படுத்துகின்றனர். இதனால் சூழல் வெகுவாக மாசடைகின்றது.

இது மட்டுமன்றி பாலித்தீன்களை, தாம் உண்ணும் உணவுகளோடு மிருகங்களும் பறவைகளும் சேர்த்து உண்பதால் அவை அழிவடைந்து வருகின்றன. இவற்றை எரிப்பதால் சூழல் மாசடைந்து ஓசோன் படலமும் பாதிப்படைகின்றது. ஆகவே நாம் வாழும் சூழலை பாலித்தீன், பிளாஸ்டிக் அற்றதாக பாதுகாப்பது நமது கடமையாகும்.

காப்போம்! காப்போம்!

மாசில்லா உலகைக் காப்போம்.

LIVEWORKSHEETS

**சரியான விடையைத் தெரிவு செய்க :**

அ. பிளாஸ்டிக்கை தமிழில் எவ்வாறு அழைப்பர் ____________.

அ. நாழி

ஆ. நெகிழி

ஆ. பாதிப்படைகின்றன - என்பதனைப் பிரித்து எழுதுக_______.

அ. பாதிப்பு + படைகின்றன

ஆ. பாதிப்பு + அடைகின்றன

**இ. கோடிட்ட இடத்தை நிரப்புக.**

அ. பிளாஸ்டிக், பாலித்தீன் பொருட்களை எரிப்பதால் சூழல் மாசடைந்து ______________ படலமும் பாதிப்படைகின்றது.

ஆ. நாம் வாழும் சூழலை பாலித்தீன், பிளாஸ்டிக் அற்றதாக பாதுகாப்பது நமது _____________ ஆகும்.

இ. பிளாஸ்டிக்கை தமிழில் _____________ என்பர்.

LIVEWORKSHEETS